| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு.மு.விஜயரெங்கபாண்டியன்,<br>வருவாய் வட்டாட்சியர்,<br>கோயம்புத்தூர் வடக்கு. | பெறுநர்<br>செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>கோயம்புத்தூர். |

ந.க.எண்.4500/2025/அ4 நாள்: 15.07.2025

அய்யா,

பொருள்: விளம்பரம் - பணியிடம் - கோயம்புத்தூர் மாவட்டம் - கோயம்புத்தூர் வடக்கு வட்டம் - காலியாக உள்ள ஆறு கிராம உதவியாளர் பணியிடத்தினை வேலை வாய்ப்பகம் மற்றும் பத்திரிக்கை விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களின் மூலம் நியமனம் செய்தல் - நாளிதழ்களில் விளம்பரம் செய்தல் - தொடர்பாக.

பார்வை: கோயம்புத்தூர் மாவட்டஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.CLRREV/8126//2025/அ5, நாள்:-01.07.2025

***

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களில் ஆறு கிராம உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. மேற்படி பணியிடத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலமாக பட்டியல் பெற்றும் மற்றும் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து அதன் மூலம் வரும் விண்ணப்பங்களை பெற்று நேர்முக தேர்வு நடத்தி பணிநியமனம் செய்திட மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிநியமனம் செய்வது தொடர்பான வேலை வாய்ப்பு அறிவிக்கையினை இரண்டு நாளிதழ்களில் 16.07.2025 அன்று வெளியிட ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் விளம்பரம் செய்ய நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை செலுத்திவிடுகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு- அறிவிக்கை எண்.01/2025

தங்கள் உண்மையுள்ள,

வட்டாட்சியர்
கோயம்புத்தூர் வடக்கு.

நகல்: கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
வட்டாட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

அறிவிக்கை எண்.01/2025 நாள்.16.07.2025

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் காலியாக உள்ள ஆறு கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்: | 17.07.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: | 18.08.2025 மாலை 5.45 மணி வரை |
| பதவியின் பெயர் : | கிராம உதவியாளர். |
| ஊதிய விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 – 35,100/- |
| வட்டத்தின் பெயர்: | கோயம்புத்தூர் வடக்கு |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: | ஆறு |

நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம்:

| வ.எண் | கிராமம் |
|---|---|
| 1. | பிளிச்சி கிழக்கு & பிளிச்சி மேற்கு |
| 2. | பெரியநாயக்கன்பாளையம் |
| 3. | நரசிம்மநாயக்கன்பாளையம் |
| 4. | குருடம்பாளையம் |
| 5. | தெலுங்குபாளையம் |
| 6. | அனுப்பர்பாளையம் |

இனசுழற்சி விபரம்:

| வ. எண். | சுழற்சி எண் | இன சுழற்சி | பொது/ பெண் | முன்னுரிமை |
|---|---|---|---|---|
| 1. | 20 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | பொது | முன்னுரிமை பெற்றவர்(Priority) ஆதரவற்ற விதவை (Destitute widow) |
| 2. | 21 | பொதுப் பிரிவினர் (GT) | பொது | முன்னுரிமை பெற்றவர்(Priority) கலப்பு திருமணம் செய்தவர் (Intercaste married couple) |
| 3. | 22 | பட்டியல் வகுப்பினர் (SC) | பொது | முன்னுரிமை அற்றவர்(Non Priority) தமிழ்வழி கல்வி பயின்றவர் (PSTM) |
| 4. | 23 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC& DNC) | பெண் | முன்னுரிமை அற்றவர்(Non Priority) |
| 5. | 24 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | பொது | முன்னுரிமை அற்றவர்(Non Priority) |
| 6. | 25 | பொதுப் பிரிவினர் (GT) | பொது | முன்னுரிமை அற்றவர்(Non Priority) மாற்றுத் திறனாளி (பார்வை குறைபாடு) Differently Abled (Blind & Low vision) |

<table>
<tr><td>கல்வித் தகுதி</td><td colspan="2">1. 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களும், தோல்வி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியை கட்டாய பாடமாக கொண்டு 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2. 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (தேர்ச்சி/தோல்வி) வைத்திருக்க வேண்டும்.<br>3. மேலும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.</td></tr>
<tr><td>இதர தகுதிகள்</td><td colspan="2">1. விண்ணப்பதாரர் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br>2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.<br>3. அடிப்படை விதி 10 இன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.</td></tr>
<tr><td rowspan="4">வயது வரம்பு</td><td>குறைந்தபட்ச வயது</td><td>21 வயது (அனைத்து பிரிவினருக்கும்) (01.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.)</td></tr>
<tr><td>அதிகபட்ச வயது</td><td>32 வயது (பொதுபிரிவினர்)<br>37வயது - பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.</td></tr>
<tr><td>மாற்றுத் திறனாளிகளுக்கு</td><td>அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக தளர்வு வழங்கப்படும்.</td></tr>
<tr><td>முன்னாள் இராணுவத்தினருக்கு</td><td>50 வயது - பொதுபிரிவினர்<br>55 வயது - பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர்(அருந்ததியர்) / பழங்குடியினர்.<br>(அரசாணை (நிலை) எண். 91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள். 13.09.2021-இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)</td></tr>
<tr><td>விண்ணப்பிக்கும் முறை</td><td colspan="2">கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://coimbatore.nic.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். காலம் கடந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.</td></tr>
<tr><td>குறிப்பு</td><td colspan="2">1. கூடுதல் விபரங்களுக்கு https://coimbatore.nic.in இணையதளத்தில் பார்க்கவும்.<br>2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/ வாசித்தல்/ எழுதுதல், திறனறித்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.</td></tr>
</table>

<u>வட்டாட்சியர் அலுவலக முகவரி</u>

வருவாய் வட்டாட்சியர்,
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர் வடக்கு,
பாலசுந்தரம் ரோடு,
கோயம்புத்தூர் - 641018.

வருவாய் வட்டாட்சியர்
கோயம்புத்தூர் வடக்கு